கொடுத்திருக்கின்ற பிரச்சினைக்கு பதில் சொல்வதென்றால், மத்திய அரசாங்கத்திடமிருந்துதான் பதில் கேட்டு வாங்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை. இல்லை. இதையெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) நான் மத்திய அரசிடமிருந்து பதில் கேட்டு வாங்க வேண்டும். இதையெல்லாம் செய்ய முடியாது. தயவு செய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இந்த அவையினுடைய நேரத்தை வீணாக்காதீர்கள். உட்காருங்கள்.

(உ) திருவள்ளூர் தொகுதி, இலட்சுமிவிலாசபுரத்தில் மணல் அள்ளுவதைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. வி.ஜி. ராஜேந்திரன், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருவாலங்காடு பகுதியில் உள்ள இலட்சுமிவிலாசபுரம் என்ற கிராமத்தில், கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே அரசே மணல் அள்ளுவதாக அங்கு பொதுமக்கள் கூடி கிட்டத்தட்ட ஒரு வார காலமாக போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்னிடம் கொடுத்துள்ள அறிவிப்பில் என்ன கொடுத்திருக்கிறீர்களோ, அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: *அதைத்தான் சொல்கிறேன். தயவு செய்து அரசு முன்வந்து அதைத் தடை செய்து, விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும். ஏனென்றால் விவசாயிகள். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கின்ற அறிவிப்பை நான் துறைக்கு பதிலுக்காக அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.*

(ஊ) திண்டுக்கல் மாவட்டம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் பாலை ஆவின் நிறுவனமே கொள்முதல் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*